T-UN-672

தமிழ்ப் பல்கலைக்கழகச்

செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2034 மார்ச்சு 2003

ஆபிரகாம் பண்டிதர் அறக்கட்டளை

தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையினரால் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புல அரங்கில் ஆபிரகாம் பண்டிதர் அறக்கட்டளை இசைப்போட்டியும், சொற்பொழிவும் 19-02-2003 அன்று நடத்தப்பட்டன. இசைப்போட்டியில் ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய பாடல்கள் பாடப்பட்டன. இதில் தஞ்சையைச் சுற்றியுள்ள பள்ளி, கல்லூரி மாணவியர்கள் பங்கேற்றனர். முன்னதாகப் போட்டியின் நெறிமுறைகளை இசைத்துறைத் தலைவர் முனைவர் இ.அங்கயற்கண்ணி அவர்கள் விளக்கினார்.

போட்டிக்கு நடுவர்களாக கலைமாமணி ஜானகி சுப்பிரமணியம், இசைத்துறை முனைவர் பட்ட மாணவி செல்வி வி.உத்திராதேவி ஆகியோர் இருந்தனர். பிற்பகலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் போட்டியில் முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகளும், சான்றிதழ்களும், ஆறுதல் பரிசும் வழங்கப்பட்டன. இதில் வெங்கடேசுவரா மெட்ரிக்குலேசன் பள்ளி மாணவி செல்வி இரா.மோனிஷா முதல் பரிசும், பொன்னையா இராமஜெயம் கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி வெ.நா.அபர்ணா இரண்டாம் பரிசும், கிறித்துவப் பெண்கள் மேனிலைப்பள்ளி மாணவி செல்வி பா.ஸ்வீட்லின் பெனினால் மேரி மூன்றாம் பரிசும், வெங்கடேசுவரா மெட்ரிக்குலேசன் பள்ளி மாணவி செல்வி ஸ்ரீ நந்தினி ஆறுதல் பரிசும் பெற்றனர். துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமை உரையாற்றி, மாணவியர்களுக்குப் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார். ஆபிரகாம் பண்டிதரின் 24 சுருதிகள் என்ற தலைப்பில் முனைவர் சகோதரி மார்கரெட் பாஸ்டின் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள். முன்னதாக முனைவர் இ.அங்கயற்கண்ணி அவர்கள் வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியின் முடிவில் திருமதி இரா.மாதவி அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

-இசைத்துறை

இசைத்துறை

தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையின் சார்பில் பாரதி சங்கீத வித்யாலயா அறக்கட்டளைச் சொற்பொழிவு 20-02-2003 அன்று மாலை 3-30 மணிக்கு நடைபெற்றது. விழாவில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையேற்றார். சிறப்புச் சொற்பொழிவாளர் முனைவர் மா.சுப.சரளா அவர்கள் தமிழிலக்கியத்தில் நாட்டிய வரலாறு என்ற தலைப்பில் செயல்முறை விளக்கத்தோடு உரையாற்றினார்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இசைத்துறைத் தலைவர் முனைவர் இ.அங்கயற்கண்ணி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இறுதியாக திருமதி இரா.மாதவி அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவுற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறக்கட்டளை இசைப்போட்டி

தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையின் சார்பில் 20-02-2003 அன்று மொழிப்புல அரங்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறக்கட்டளை இசைப்போட்டி நடைபெற்றது. இசைப்போட்டி காலை 10-30 மணிக்குத் தொடங்கியது. இசைத்துறைத் தலைவர் முனைவர் இ.அங்கயற்கண்ணி வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் போட்டிக்கான நெறிமுறைகளை விளக்கினார். இசைத்துறையின் ஆவணக் காப்பக உதவியாளர் திருமதி இரா.மாதவி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை நினைவுகூர்ந்தார். போட்டிக்கான நடுவர்களாக முனைவர் திருமதி ஞானாம்பிகை குலேந்திரன், கலைமாமணி பி.ஆர்.திலகம், தஞ்சை வயலின் நடராஜன் ஆகியோர் இருந்தனர். போட்டியில் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் குறிப்பாகத் திருச்சி, மதுரை, சென்னை, சிதம்பரம் ஆகிய இடங்களில் உள்ள இசை நிறுவனங்களிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் மாணவ மாணவியர்களும், விழுப்புரம், கடலூர், திருவாரூர் மாவட்ட அரசு இசைப் பள்ளி மாணவ மாணவியர்களும் கலந்து கொண்டனர். இசைப்போட்டியில் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் பாடப்பட்டன. முதல் பரிசுக்குரிய மாணவியாகச் சென்னை சங்கீத வித்வத் சபையைச் சேர்ந்த லஷ்மிஸ்ரீ என்பவரும், இரண்டாம் பரிசுக்குரியவராக மதுரை சத்குரு சங்கீத வித்யாலய மாணவராகிய கமலக்கண்ணன் என்பவரும், மூன்றாம் பரிசுக்குரியவராகத் திருச்சி கலைக்காவேரி நுண்கலைக் கல்லூரி மாணவி ஸ்ரீவித்யா என்பவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்று மாலையில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பரிசாகத் தம்புராவும், இரண்டாம் பரிசாக வெள்ளிக்கோப்பை ஒன்றும், மூன்றாம் பரிசாகத் தஞ்சாவூர் கலைத்தட்டும் வழங்கப்பட்டன. அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

போட்டியில் கலந்து கொண்ட முதல் மூன்று பரிசுகள் பெற்ற மாணவ மாணவிகள் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களைப் பாடி வந்திருந்த அனைவரையும் மகிழ்வித்தனர்.

முன்னதாக இசைத்துறைத் தலைவர் வரவேற்புரை ஆற்றினார். ஆவணக் காப்பக உதவியாளர் நன்றியுரை ஆற்றினார்.

இலக்கியத்துறை

21-02-2003 அன்று இலக்கியத்துறையின் சார்பில், முன்னை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிறுவிய அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. கா.சு.பிள்ளைஇலக்கியப் பணிகளின் பல்வேறு பரிணாமங்களை மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னைத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் தமிழண்ணல் அவர்கள் எடுத்துரைத்தார்கள். ந.மு.வேங்கடசாமி நாட்டார் தமிழ்ப் பணிகள் என்ற பொருண்மையில் அவருடைய கட்டுரைப் பணிகள், இதழ்ப் பணிகள், உரைப்பணிகள் குறித்துப் பேராசிரியர் முனைவர் மது.ச.விமலானந்தம் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

மொழியியல் துறை

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல்துறையில் பிப்ரவரி 26,27 ஆகிய இரு நாட்கள் முன்னைய முதல்வர் அவர்கள் நிறுவிய அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளை நல்கையில் சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேரா.முனைவர் பொன். கோதண்டராமன் (பொற்கோ) அவர்கள் தமிழும் சப்பானிய மொழியும்-மொழிவழி ஒப்பாய்வு என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள்.

மொழியியல் துறைத்தலைவர் முனைவர் எம்.சுசீலா அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் பண்பாடு, இலக்கியம், மொழி, யாப்பு ஆகிய பல நிலைகளில் தமிழ்மொழியும், ஜப்பானிய மொழியும் ஒத்துக் காணப்படுவதாகக் கூறினார்கள். அடுத்து அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றிய பேரா.பொற்கோ அவர்கள் ஜப்பானிய மொழி உலக மொழிக் குடும்பங்களில் எந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்று நிர்ணயிக்க இயலாத நிலையில் தமிழும், ஜப்பானிய மொழியும் ஒலிகள், சொற்கள் நிலையில் பல ஒற்றுமைகள் கொண்டிருப்பது ஆழ்ந்த ஆய்வுக்குரியது என்றும் இந்த ஆய்வு தமிழ் மொழியின் வரலாற்று ஆய்விற்கும் மிகவும் பயனுடையதாக அமையும் என்றும் கூறினார். ஜப்பானிய அறிஞர் சுசுமோ ஓனோவும் தாமும் தொடர்ந்து இந்த ஆய்வுப்பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறினார்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த சொற்பொழிவின் முதல்நாள் உரையில் பேராசிரியர் பொற்கோ அவர்கள் தமிழ்-ஜப்பானிய மொழி ஒப்பீட்டு ஆய்வு குறித்து இதுவரை நடந்துள்ள ஆய்வுகளை விவரித்துக் கூறினார்கள். 1981-ல் உலகத் தமிழ் மாநாட்டிலும், 1982-ல் டோக்கியோவில் உலக மொழியியலாளர் மாநாட்டிலும் இந்த ஆய்வு சிறப்பான இடத்தைப் பெற்றதையும், 2000-ல் ஆய்வுப்பணி மதிப்பீட்டுக் கருத்தரங்கப் பணிகள் நூலாக வெளியிடப்பட்டதையும் கூறினார்கள்.

பேராசிரியர் அவர்கள் தமது இரண்டாம் நாள் உரையில் உலக மொழிகளில் மேற்கொள்ளப்படும் வகைப்பாட்டு ஆய்வு, வரலாற்று ஆய்வு ஒப்பீட்டு ஆய்வு ஆகியவற்றை விளக்கித் தமிழ்-ஜப்பானிய மொழி ஒப்பீட்டு ஆய்வில் காணப்பட்ட சில முக்கியமான செய்திகளைக் கூறினார்கள்.

1. ஒலியாலும், பொருளாலும் தொடர்புடைய சொற்களின் அடிப்படையில் மொழிகள் இனத்தொடர்புடைய மொழிகள் என்று நிறுவப்படுகின்றன. அத்தகைய பல சொற்கள் தமிழ் ஜப்பானிய மொழிகளில் காணப்படுகின்றன.

2. அ-,இ-,உ-,எ-,சுட்டு அடிகள் ஜப்பானிய மொழியில் உள்ளன.,

3. தன்வினை, பிறவினைப் பாகுபாடு தமிழைவிடத் தெளிவாக வரையறுக்கப்பட்ட நிலையில் ஜப்பானிய மொழியில் காணப்படுகிறது.

4. தமிழ்மொழியில் பவணந்தியும், கம்பரும் பிற மொழிச் சொற்களைத் தமிழ்மயமாக்கிய முன்னோடிகள். இந்தப் பண்பு ஜப்பானிய மொழியில் பின்பற்றப்பட்டு அனைத்துப் பிற மொழிச் சொற்களும் ஜப்பானியமயமாக்கப்பட்டே பயன்பாட்டில் உள்ளன.

5. தமிழில் வினா விகுதி-ஆ வாக்கியத்தின் எல்லாச் சொற்களுடனும் இணைந்து வினா எழுப்பும் பண்புடையது. இந்தப் பண்பும் ஜப்பானிய மொழியில் காணப்படுகிறது.

மேற்கண்ட மொழி வழி ஒற்றுமைக் கூறுகளை விவரித்த பின்னர் பேராசிரியர்அவர்கள் 7ஆம் நூற்றாண்டிற்கு முந்திய ஜப்பானிய வரலாறு தெரியாத நிலையில் மொழிக்கூறுகளும், புதைபொருள் ஆய்வில் தெரிய வரும் கூறுகளுமே அந்த நாட்டின் பழைய வரலாற்றை அறிய உதவும் என்று கூறினார். இதன் பின்னர் பேராசிரியர் அவர்கள் இசைக்கருவிகள், யாப்பு, அமைப்புகள், மற்போர், வில்வித்தை, வாள்வீச்சு போன்ற பண்பாடுகளிலும், பழைய மரபுகளைப் போற்றிப் பாதுகாப்பதிலும் ஜப்பானும் தமிழ்நாடும் ஒத்திருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள்.

பலவகைகளிலும் தமிழ் மக்கள் பண்பாட்டையும், மொழியையும் ஒத்த ஜப்பானிய மக்கள் மரபின் மேல் புதுமையைக் கட்டி மரபையும் பாதுகாத்துப் புதுமையையும் போற்றிச் சிறந்த ஒரு நாடாக வளர்ச்சி பெற்றிருப்பது தமிழ்மக்கள் பின்பற்ற வேண்டிய ஒரு எடுத்துக்காட்டு என்று கூறிச் சொற்பொழிவை முடித்தார்கள். பேராசிரியர் கி.அரங்கன் அவர்கள் நன்றியுரை கூற நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவுற்றது.

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

திருமிகு - பெருமாள் அய்யர்
சரஸ்வதி மஹால் நூலகம்,
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

தொல்லறிவியல் துறை

தொல்லறிவியல் துறையின் சார்பில், பிப்ரவரித் திங்கள் 28,2003 முற்பகல் 11 மணி அள்வில் உலக அறிவியல் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பதிப்பகச் செம்மல் அமரர் திரு க.கணபதி நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு, மொழிப்புலக் கருத்தரங்கக் கூடத்தில் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இச்சொற்பொழிவினைக் காரைக்குடி, மைய மின் வேதியியல் ஆய்வக விஞ்ஞானி முனைவர் மி.நோயல் அவர்கள், அறிவியல் முறைகள் - ஒரு வரலாற்றுப் பார்வை எனும் தலைப்பில் உரையாற்றியபோது, இயற்கையைப் புரிந்து செயல்படும் அறிவார்வமிக்கவரும் (Curiosity) ஆய்வாளர்தான் என்ற வகையில் குரங்கிற்கு இயற்கையிலேயே இவ்வார்வம் மிகுதியெனத் தெரிவித்தார். இன்றைய அறிவியல் வளர்ச்சியில் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட தொய்வினை மேலை நாடுகள் எவ்வாறு போக்கின என்றும், திருக்குறள் கூறும் பகுத்தறிவுப் பார்வை பண்டைய கிரேக்கச் சிந்தனைகளோடு ஒத்தவையாக இருந்தன என்றும் கூறினார். இருப்பினும் கி.மு.200களில் அறிவியல் சிந்தனை சரியத் தொடங்கியதெனினும் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிவியல் விழிப்புணர்வு பரவலாகி வருவது வரவேற்கத்தக்கது எனவும் தெரிவித்தார்.

முன்னதாகத் துணைவேந்தரவர்கள் தமது தலைமையுரையில் நம் சமுதாயத்தில் குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயத்தில் பன்னெடுங் காலமாக அறிவியல் கூர்நோக்கு இருந்துள்ளதைப் பெருமையுடன் நினைவு கூர்ந்ததோடு தமிழ்கூறு நல்லுலகம் அறிவியலை மேலும் பரவலாக்க முன்வரவேண்டுமென வலியுறுத்தினார்.

துறைத்தலைவர், முனைவர் ஆ.இராசேந்திரன், வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இணைப்பேராசிரியர் முனைவர் ச.பரிமளா நன்றி நவில நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
-முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்

வரவேற்கிறோம்

தமிழ்ப் பல்கலைக்கழகத்திலிருந்து புதிய பொலிவுடன் வெளிவரவிருக்கும் தமிழ்க்கலை, Tamil Civilization ஆகிய இதழ்களுக்கு ஆய்வுக் கட்டுரைகள், மதிப்புரைக்கு நூல்கள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகளையும் நூல்களையும் இரண்டு படிகள் இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 001 என்ற முகவரிக்கு அனுப்பியுதவ வேண்டுகிறோம்.

பதிப்பாசிரியர் : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் -613001